(Chapter X of Civil Procedure)

.....

SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC / ST (POA) ACT, RAMANATHAPURAM.

**Spl.S.C.No. 87/19**
**PW:** 1

..

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents

| | | |
|---|---|---|
| Name | : | பிரபு |
| Father's/Husband Name | : | நாகு. |
| Village | : | மூவலூார். |
| Taluk | : | பரமக்குடி |
| Caste | : | பள்ளர். |
| Religion | : | இந்து |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2020.

**<u>முதல் விசாரணை :-</u>**

**நான் பரமக்குடி மூவலூார் எஸ். மாரியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும்.** கடந்த 18.01.2019 அன்று மாலை 03.00 மணிக்கு எனது வீட்டு பக்கத்தில் உள்ள கால் நடை மருத்துவமனையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த காளீஸ்வலரன் அவரது அண்ணன் கார்செல்வம் அவர் தம்பி நாகநாதன் அவரது அம்மா நாகவள்ளி அவருடன் வந்த முகம் தெரியாத ஆறு நபர்கள் வந்து என்னை காளீஸ்வரன் என்னை வந்து ஏன்டா தேவிடியா பள்ளப் பயலே என்று கேட்டு கத்தி எடுதது குத்தினான். பிறகு அவரது அண்ணன் கார்செல்வம் பின்பக்கமா வந்து பள்ளப்பயலை கொன்றுவிடுவேன் என்று பின்பக்கம் குத்தினான். அவரது தம்பி நாகநாதன் ஏன்டா தேவிடியா பள்ளப்பயலே உனக்கு தேவையாடா என்று கேட்டு அவருடன் வந்த ஆறு நபர்களும் வந்து கட்டையால் சராமாரியாக தாக்க ஆரம்பித்தார்கள். அப்போது என்னால் ஒன்றும் செய்யமுடியாமல் இருந்தேன். பிறகு அவரது அம்மா நாகவள்ளி வந்து இநத் பள்ளப்பயல்கள் தொல்லை தாங்கவில்லை என்று சொல்லி அவர்களை அடித்து கொல்லுங்கடா என்று கூறினார். அதன்பின் எனது மனைவியும், எனது தம்பியும் ஓடி வந்து விலக்கிவிட்டபோது எதிரிகள் ஓடிவிட்டார்கள். அங்கு இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் போன் செய்து பரமக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகும்.

**குறுக்கு விசாரணை:**

இல்லை.

Sd/- V.V.Thaniyarassu
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.